வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண் 4669 / ஆ 4 / 2020 நாள் 17–06–2021

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் தேர்வு (NMMS) பிப்ரவரி 2021 – தேர்வு நாள் 21–02–2021 தேர்வு முடிவுகள் வெளியிடுதல் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கோருதல் சார்பு.

பார்வை : 1. புதுடெல்லி, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை சார்பு செயலாளர் அவர்களின் கடிதம் எண் F.NO, 1-10 -2010 SS DATE 14-10-2020
2. தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரின் கடிதம் எண் 027369 / NMMSS / 2020 நாள் 03–06–2021
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை– 6 ந.க.எண் 035424 / எம் / இ4 / 2020 நாள் 15–06–2021

....

பார்வை 1ல் காணும் கடித்தின்படி 2021–2022ம் கல்வி ஆண்டிற்கான மத்திய கல்வி உதவித் தொகைத் திட்டமான தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கான தேர்வு கடந்த 21–02–2021 அன்று எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு நடத்தி முடிக்கப்பட்டது.

பார்வை 2 மற்றும் 3ல் காணும் கடிதத்தில் மேற்குறிப்பிடப்பட்ட தேர்வில் பங்குபெற்று கல்வி உதவித் தொகை பெற தகுதியான தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் தேர்வு பட்டியல் பள்ளி வாரியாக பெறப்பட்டுள்ளது. இத்தேர்வு பட்டியல் தகவலுக்காகவும் தங்கள் நடவடிக்கைக்காகவும் இத்துடன் இணைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும் இத்தேர்வில் தகுதி பெற்றுள்ள தேர்வர்கள் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வியை தொடரும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான அனைத்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் முழு விவரங்களை இணைப்பில் காணும் படிவம் மூலம் பெற்று தயார் நிலையில் வைத்திருக்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

1. தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல்
2. படிவம்

17/06/2021

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

17/6/21

17/6/21

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்
நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.